**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 63/2012**
**connected with 208/2011**

PW2 – ராமகிருஷ்ணன் த/பெ சிவசிதம்பரம்
நாள் – 08.01.2024.

**<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் செம்மங்குடி குளத்தூரில் உள்ளது. புல எண் என்ன என்றால் 157/6 ஆகும். பழைய புல எண் தெரியுமா என்றால் தெரியும். புல எண் 157 ஆகும் தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 20 செண்ட் ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். அகிலன் என்கின்ற பூவாயி நஞ்சைக்கு தெற்கு, பாய்ச்சல் வாய்க்காலுக்கு வடக்கு, ஜெகராம்பீவி நஞ்சைக்கு கிழக்கு, சம்சுன்னிஷா நஞ்சைக்கு மேற்கு இதன் மத்தியில் உள்ளது. அசல் வழக்கு எண் 63/2012 ஐ யார் தாக்கல் செய்தது என்றால் என்னுடைய தாயார், நான் மற்றும் எனது சகோதரி சீத்தா ஆகியோர்கள் தாக்கல் செய்துள்ளோம்.

அசல் வழக்கை 63/2012 ஐ நானும் எனது தாயார் மட்டுமே தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எனது தாயாரின் இறப்பிற்கு பிறகுதான் எனது சகோதரி தரப்பினராக சேர்க்கப்பட்டார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 63/2012 ல் 3-ம் வாதியை சிவசிதம்பரத்தின் வாரிசாக சேர்க்காமல் கிருஷ்ணம்மாளின் வாரிசாகத்தான் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு சொந்தமாக இருந்தது என்றால் கோவிந்தசாமி படையாச்சிக்கு சொந்தமாக இருந்தது. கோவிந்தசாமி படையாச்சிக்கு சிவசிதம்பரம் குத்தகைதாரர் என்றால் சரிதான்.

சிவசிதம்பரத்திற்கு சிவா என்ற ஒரு மகன் உண்டு என்றால் சரிதான்.

சிவாவின் மனைவி பெயர் கலா என்றால் சரியல்ல. அவருக்கு திருமணம் ஆகவில்லை. சிவா கலா வீட்டில் தங்கியிருந்தாரா என்றால் சரியல்ல. நட்பு முறையில் இருந்தார். சிவாவிற்கும் கலாவிற்கும் பிறந்த மகன் தான் பாபு என்றால் சரியல்ல. பாபு என்பவர் கலாவின் மகன் ஆவார். பாபு என்பவர் தான் அசல் வழக்கு 63/2018 ல் 2-ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

நான் வெளிநாடு எப்போது சென்றேன் என்றால் 2007 ஆம் ஜனவரி மாதம் சென்றேன். தேதி நினைவில்லை. எந்த நாட்டிற்கு சென்றேன் என்றால் கத்தார். எப்போது திரும்பி வந்தேன் என்றால் 2010 ஆம் வருடம் வந்தேன். மாதம், தேதி நினைவில்லை. கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இயலுமா என்றால் இயலாது. ஏனென்றால் புதுப்பிப்பதற்காக ஒப்படைத்துள்ளேன். எப்போது ஒப்படைத்தேன் என்றால் 4 மாதங்களுக்கு முன்பு. பொதுவாக 1 மாதத்தில் கடவுச்சீட்டை புதுப்பிக்க இயலும் என்றால் நான் தனியாரிடம் கொடுத்துள்ளதால் என்னிடம் பணம் இல்லாததால் உடனடியாக புதுப்பிக்க இயலவில்லை. கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் நான் எப்போது வெளிநாடு சென்று எப்போது இந்தியா திரும்பி வந்தேன் என்ற விவரம் தெரிய வரும் என்பதால் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சிவசிதம்பரம் உயிருடன் இருந்த காலத்திலேயே வாய்மொழி ஏற்பாட்டின்படி தாவா சொத்தை சிவாவிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. சிவா மட்டுமே முழு உரிமையாளர் என்ற முறையில் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நானும், சிவாவும் சேர்ந்து தான் அனுபவித்து வந்தோம். எங்கள் குடும்பத்தில் வழக்கு சொத்து தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு குடும்ப சொத்து உள்ளது என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு யார் வசம் உள்ளது என்றால் எனது வசத்தில் தான் உள்ளது.

சிவா உயிருடன் இருந்த காலத்தில் 27.03.2007-ல் தாவா சொத்தை

பொறுத்து 1-ம் பிரதிவாதி பாலசுந்தருக்கு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சிவா எப்போது இறந்தார் என்றால் 04.07.2007 ஆம் தேதி. சிவா இறப்பதற்கு முன்பு தாவா சொத்து சிவாவின் வசத்தில் தான் இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தின் வசத்தில் இருந்தது. நான் வெளிநாடு செல்லும்போது எனது சகோதரரிடம் விட்டு சென்றேன். சிவா இறந்த பிறகு தாவா சொத்து அவரது வாரிசான 2-ம் பிரதிவாதி வசம் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து 2-ம் பிரதிவாதி வசம் இருந்ததால் தான் 1-ம் பிரதிவாதிக்கு 09.06.2010-ல் கிரயம் ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

09.06.2010 ஆம் தேதிய வா.சா.ஆ.9 சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆனது ஆவணம் ஏற்படுத்துவதற்காக முறையாக இருந்ததால் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் இடையூறு செய்ததால் தான்1-ம் பிரதிவாதி பாலசுந்தர் எங்கள் மீது அசல் வழக்கு எண் 208/2011 ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து 1-ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பாளர் அல்ல என்றால் சரியல்ல. நானும் எனது தாயார் மற்றும் எனது சகோதரி ஆகியோர்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் எனது தகப்பனாரால் பணம் செலுத்தப்பட்டது என்றால் சரிதான்.

தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீடு எரிந்து விட்டதால் தாக்கல் செய்ய இயலவில்லை. எந்த ஆவணம் தீயில் எரிந்து விட்டது என்றால் வாய்தா ரசீதுகள் ஆகும். எந்த ஆண்டு எங்கள் வீடு தீ பிடித்து எரிந்தது என்றால் 2007 ஆம் ஆண்டுக்கு பிறகு. எனது தாயார் பயன்படுத்திய வீடு என்பதால் அதன் பிறகு நாங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் வாய்தா ரசீது செலுத்தியிருந்தால் கிராம நிர்வாக அலுவலரிடம் அடிக்கட்டை இருக்கும்

என்றால் சரிதான். எனது வீடு தீ பிடித்து எரிந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து எங்கள் வசம் இல்லாததால் தான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நாங்கள் குத்தகைதாரர் என்ற உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நாங்கள் குத்தகைதாரர் என விளம்புகை கோர இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ல் கண்டுள்ள முகவரிதான் சிவாவின் இருப்பிட முகவரி என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 ல் சிவாவின் இருப்பிட முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ளது பாபுவின் முகவரிதான் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.8 படி சிவா பாபுவின் முகவரியில் தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல வருவார் போவார். சிவா பாபு வீட்டிற்கு நட்பின் அடிப்படையில் சென்று வருவார். சிவா பாபுவின் வீட்டில் தான் நிரந்தரமாக தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. கலா என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சிவாவின் மகன் தான் பாபு என்பதால் வா.சா.ஆ.9 செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. எனவே அசல் வழக்கு எண் 63/2012 தள்ளுபடி செய்தும், அசல் வழக்கு எண் 208/2011 ஐ தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

2-ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

மறுவிசாரணை இல்லை.